# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2401/33 - 2024 සැප්තැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2024.09.13

*2401/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

### ஆளுநரால் மேற்கொள்ளப்படும் பிரகடனம்

கிழக்கு மாகாண சபை

**கிழக்கு மாகாண ஆளுநரால் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் 154(இ) ஆம் உறுப்புரையின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநர் எம். செந்தில் தொண்டமான் ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் கிழக்கு மாகாண பாடசாலைகள் தொடர்பாக 1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் 2024.09.12 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரத்தக்கதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

1. மாகாண பாடசாலைகளில் பௌதீக வளங்களை வழங்குவதற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அனுசரணையாளர்களை ஈடுபடுத்துவதற்கான நடைமுறைகள் பின்வருமாறு,

1.1 உபகரணங்களை விநியோகித்தல்.- உபகரணங்களின் வகைகள், தொகை, விரிவான பயனாளிகளின் விபரம், விநியோக முறை, செயற்பாட்டின் நோக்கம் மற்றும் கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் ;

1.2 பௌதீக வளங்களை வழங்குதல் (கட்டிடம் மற்றும் கட்டுமானம்) கட்டுமானத்தின் நோக்கம், பயனாளிகளின் விபரம், கட்டிட திட்ட வரைபு மற்றும் வரைபடம், கட்டுமானம் அமையவுள்ள இடம், கட்டுமானத்திற்கான உத்தேச திட்ட மதிப்பீடு, கோரிக்கைகள், தேவையான சிபாரிசுகள் மற்றும் கல்வெட்டின் மாதிரி ஆகியவை இதில் அடங்கும்.

இந்த நடவடிக்கைகளுக்கு மாகாணக் கல்விச் செயலாளரின் அனுமதி பெறப்பட வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ளபடி ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். நிகழ்வு அல்லது விழாவை ஒழுங்குபடுத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பு வாய்ந்தவராவார்.

2. மாகாண பாடசாலைகளின் வாத்தியக்குழுவானது பாடசாலை தொடர்பான நிகழ்வுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.மாகாண பாடசாலைகளின் வாத்தியக்குழுவினை வேறு நிகழ்வுகளுக்கு பயன்படுத்தும்போது நிகழ்வு ஏற்பாட்டாளரால் அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விச் செயலாளரிடம் அனுமதியைப் பெற வேண்டும். வாத்தியக்குழு மாணவர்களுக்கு குடிநீர், உணவு, தகுந்த தங்குமிடம் உள்ளிட்ட போதிய வசதிகள் மற்றும் பராமரிப்பானது ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படல் வேண்டும்.

அரசியல் நிகழ்ச்சி நிரல்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள், கல்வி அல்லாத நிகழ்வுகள் மற்றும் தொலைதூர இடங்களுக்கு பேருந்து போக்குவரத்து தேவைப்படும் நிகழ்வுகளுக்கு வாத்திய இசைக்குழுவைப் பயன்படுத்துவது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

**எம். செந்தில் தொண்டமான்,**
கிழக்கு மாகாண ஆளுநர்.

EOG 09-0112

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.